**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண்.152/2015</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **13.10.2025** |
| **பெயர்** | **கன்னிமா** |
| **த/பெ** | **சீனிவாசன்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.44 p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

21. இந்த வழக்கை 2011 ல் நான் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சங்கதிகள் எனக்கு தெரியும். பதிலுரை பத்தி 21 ல் என்னுடைய கணவர் 27.09.2013 ல் என்னுடைய சகோதரரான இறந்துவிட்ட சங்கரின் மனைவியான மஞ்சுளா மற்றும் விக்னேஷ்ராஜ் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பாரத்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த கிரைய ஆவணமா என்றால் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சீனிவாசன் எனது கணவர் தான் விற்பனை செய்தவர்கள் காலம் சென்ற எனது சகோதரரின் வாரிசுகள் என்றால் சரிதான்.

22. 27.09.2013 தேதியிட்ட கிரைய பத்திரமானது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையின் பெயரில் குறியீடு செய்யப்படுகிறது) 2013 ல் எனது கணவர் கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியும் அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவர் கிரையம் வாங்கியுள்ள விவரத்தை வழக்கில் கூறியுள்ளேன். எனது வழக்குரையில் எந்த இடத்தில் அதனை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே நான் சொன்ன சாட்சியத்தில் எனது குடும்பத்திற்கு சொந்தமான சொத்தினை யார் கிரையம் செய்திருந்தாலும் செல்லாது என குறிப்பிட்டுள்ள பட்சத்தில்

பி.வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் செல்லாது என்றால் சரிதான்.

23. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை தயார் செய்தது வழக்கறிஞர் தான் என்றால் சரிதான். எனது தந்தை சம்பாதித்த சொத்தினை எங்கள் பாகத்திற்கு வந்த 1¾ சென்டை சங்கரின் வாரிசுகள் விற்பனை செய்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். கூட்டாக வந்த சொத்தை வாய்மொழியாக பாகம் பிரித்த பங்கினை விற்பனை செய்ததாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்து விவரத்தில் நீளம் மற்றும் அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான்கு எல்லைகள் வடக்கில் கன்னிம்மா பாகம் என்றும், தெற்கில் எம்.ஜி.ஆர் செல்லும் சாலை என்றும், கிழக்கில் கன்னியப்பன் பாகம் என்றும், மேற்கில் பி.ரவி என்பவரின் பாகம் மனை என்றும் உள்ளது என்றும் ஆனால் 1ம் பிரதிவாதி குமாருக்கு எந்த பாகமும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

24. என் குடும்பத்திற்கு சொந்தமான சொத்தினை எனது சகோதரர் ஆன சங்கர் கிரையம் கொடுத்து தான் வாங்கினார் என்றால் சரிதான். கிரைய தொகையை ரொக்கமாக கொடுக்கப்பட்டதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 9 சென்டில் எந்த பக்கம் 1¾ செண்ட் கொடுத்தனர் என்றால் எனக்கு தெரியாது. இந்த ஆவணம் எனது சகோதரரின் மனைவி போலியாக தயாரித்த ஆவணம் என்றால் சரியல்ல. இந்த வழக்கினை பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் உரிமை கோருகிறேனா அல்லது உயிலை வைத்து உரிமை கோருகிறேனா என்றால் தெரியாது. 09.12.2003 ல் எனது தந்தை எனக்கு எழுதி வைத்ததாக கூறும் உயிலினை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆன உயிலினை தான் நான் கூறியுள்ளேன்.

25. மேற்சொன்ன உயில் ஆவணத்தில் எனது கணவரை நிறைவேற்றாளராக நியமித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் எனது கணவரை அல்ல எனது சகோதரரான குமாரை தான் நிறைவேற்றாளராக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல, அதுபோல் எந்த வாசகமும் இல்லை. தற்போது சாட்சி மாற்றி அவ்வாறு வாசகம் உள்ளது என கூறுகிறார். உயில் ஆவணத்தின் அடிப்படையில் குமார் என்பவர் தாவா சொத்தினை விற்பனை செய்துவிட்டு நல்ல விலைக்கு வாங்குவதற்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல, நான் ஏற்கனவே கொடுத்துவிட்டேன். யாருக்கு எவ்வளவு தொகை கொடுத்துள்ளேன் என்பதற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரவி , சங்கர் மற்றும் மஞ்சுளாவிடம்

கொடுத்துள்ளேன், மற்ற 3 சகோதரர்களிடம் நான் எதுவும் கிரையம் வாங்கவில்லை.

26. எனது கணவர் கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது என்று கூறும்பட்சத்தில் ஆனால் எனது கணவரிடம் நான் எப்போதும் கிரையம் பற்றி கேட்கவில்லை. பி.சா.ஆ 2 எனது கணவருக்கு 1 ¾ செண்ட் கிரையப்த்திரத்தில் காலி மனை என உள்ளது ஆனால் அங்கு வீடு உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் அரசாங்கத்தை ஏமாற்றி போலியான ஆவணம் தயார் செய்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எனது தந்தை என் பெயருக்கு எழுதி வைத்ததாக கூறிய ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனது தந்தை என் பெயரில் எப்போதும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எழுதி வைத்திருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

27. எனது தந்தையின் இறப்பிற்கு பிறகு அவரின் இறுதிசடங்கை செய்வதற்காக நாங்கள் திருப்பதியில் இருந்து இங்கு வந்தேன் என்றால் ஆமாம், ஆனால் முதலில் இருந்தே இங்கு தான் வசித்து வருகிறோம். எனக்கு திருப்பதியில் போதிய வசதி இல்லாத காரணத்தினால் எனது சகோதரருடன் நான் தங்கி இருந்தேன் என்றால் சரியல்ல. என்னை திருப்பதியில் திருமணம் செய்து கொடுத்து வந்த பிறகு எனது சகோதரர்கள் எனது தந்தையுடன் தாவா சொத்தில் பொன்னேரியில் தான் இருந்து வந்தாரகள் என்றால் சரிதான். எந்த காலக்கட்டத்தில் இருந்து எதுவரை நான் வழக்கு சொத்தில் குடியிருந்தேன் என்ற விவரத்தை எனது வழக்குரையில் நான் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 01.30.p.m.**